Thiru. K. M. SUBRAMANIAM: Sir, was there an epidemic disease the forest area and wild animals died of it.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதைப் பற்றிய விபரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப் போது இந்தியாவில் சிங்கம், புலி போன்ற மிருகங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரிகிறது. இப்போது மேற்குத் தொடர்ச்சி மலையில் எவ்வளவு புலிகள் இருக்கின்றன? இவைகளின் எண்ணிக்கை வருஷா வருஷம் கணக்கு எடுக்கப் பட்டு வருகிறதா? இவைகளின் எண்ணிக்கை குறைந்து வரு கிறதா என்பதை அரசு பரிசீலனை செய்கிறதா என்பது பற்றிய விபரத்தைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்கான கணக்கு எடுக்கப்பட்ட எண்ணிக்கை கிடையாது. நானே சில சமயத்தில் பார்த்திருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, வன விலங் குகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது தேவையான ஒன்று என்று இந்த அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில, மாவட்ட அளவில் தனி அதிகாரி இருந்து பராமரிப்பு செய்து வரு கிறார்கள்.

தேக்கு உற்பத்தி

*700 வினா.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தேக்கு உற்பத்தியைப் பெருக்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இரண்டாவது ஐந் தாண்டுத் திட்ட காலத்திலிருந்து தேக்கு மரங்களை வளர்க்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1975 ஜனவரி மாதம் முடிய இதுவரை தேக்கு மரம் 9330.70 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.15 லட்சம் செலவில் சுமார் 2500 ஹெக்டேரில் தேக்கு மரங்கள் பயிரிடத் திட்டம் உள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த தேக்கு மரங்களில் வைரம் பாய்ந்த மரங்கள்தான் சிறந்தவை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவைகளில் வைரம் பாய்வதற்கு முன்னாலேயே தேக்கு மரங்களை வெட்டி விற்றுவிடுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, 100 ஆண்டு, 200 ஆண்டு என்று கணக்கு வைத்து வெட்டும் முறை கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லா மரங்களிலும் வைரம் பாய்வதில்லை. ஒரு வயது அடிப்படையில்தான் தேக்கு மரங்கள் வெட்டப்படுகின்றன. இத்தனை ஆண்டு கழித்து வெட்டுவது என்று அந்த வயதின் அடிப்படையில்தான் தேக்கு மரங்கள் வெட்டப்படுகின்றன.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆற்றங் கரைகளிலும், குளத்தங்கரைகளிலும் தண்ணீர் எப்போதும் இருக்கிறது. அந்த மாதிரி பகுதிகளில் தேக்கு மரம் பயிர் செய்து உற்பத்தி செய்யலாம். ஆகவே இதில் அரசு விசேஷ கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது தஞ்சை மாவட்டத்தில் ஆற்றங்கரைகளில் தேக்கு மரங்கள் வளர்க்கப் பட்டு வருகின்றன. எஞ்சிய பகுதிகளில் வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, இந்த மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் தேக்கு மரம் உற்பத்தி பண்ணுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது? எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் ஏற்கனவே சொன்னேன். 1975 ஜனவரி மாதம் முடிய 9,330.70 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 15 லட்சம் செலவில் 2,500 ஹெக்டேரில் பயிரிடப்படும். வரப்போகிற காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 140 ஹெக்டேர், சேலம் மாவட்டத்தில் 180 ஹெக்டேர் என்று இப்படி பயிரிடத் திட்டமுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு தேக்குமரம் தேவைப்படுகிறது ? அப்படித் தேவையாகும் மரங்கள் பூராவும் நமது மாநிலத்தில் கிடைக்கிறதா ? கன்யாகுமரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிலம் இன்னொருவரிடத்தில் இருக்கிறது. அந்த நிலத்தைத் திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மொத்தமாக ஒரு ஆண்டுக்கு எவ்வளவு தேவை என்பதற்கு கணக்கு இல்லை. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் எவ்வளவு தேவை என்பதுதான் கணக்கில் எடுக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நமது வன இலாகா மரம் நடுகிறதோடு விட்டுவிட்டு நட்ட மரங்களுக்கு சரியான பராமரிப்பு இல்லாமல் விட்டுவிடுகிறார்கள். இப்படி செய்வதால் மரங்கள் வளராமல் பாழாகிவிடுகின்றன. ஆகவே இதை மாற்றி நல்ல பராமரிப்புடன் மரங்களை வளர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன பட்டியலில் வட ஆற்காடு மாவட்டம் இல்லை. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையிலும், பாலாற்றுப் பகுதியிலும் தேக்கு மரங்கள் வளர்ப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அங்கே வளர்ப்பதற்கு அரசு நடவடிக்க எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே 410 ஹெக்டேர் நிலத்தில் வளர்க்கப்பட்டு வருகிறது. இன்னும் புதிதாக வளர்ப்பதற்கு வாய்ப்பு இருந்தால் அதுபற்றி கவனிக்கப்படும்.

திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிற போது எங்கள் மாவட்டத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. தஞ்சை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை ஊக்குவிக்க முயற்சி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஹெக்டேர் என்பது குறிப்பில் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, தேக்கு மரங்களில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இண்டியன் டீக் என்றும், பர்மா டீக் என்றும் சொல்கிறார்கள். இண்டியன் டீக்குக்கு அவ்வளவு மதிப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. பர்மா டீக்குக்குத்தான் அதிக மதிப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே பர்மா டீக்கை வளர்ப்பதற்கு அது ஒரு சிறப்பு திட்டமாக அமுல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பர்மாவிலிருந்து வருவதால் அது பர்மா தேக்கு என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்விக்கு அமைச்சரவர்களிடமிருந்து பதில் இல்லை. மவுனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பதைப்போல் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தால் மரங்கள் பாழாகிவிடுகின்றன என்பதை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கேள்வியில் சாரம் இல்லை என்றும் பொருள் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10.00)

(2) அரசினர் தீர்மானம்.

விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, '' சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும் '' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முக்கியமனா பிரச்னை என்றால், இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி இருந்தால், அதைத் தெரிவிக்க பல வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த முறையில் அதைக்கொண்டு வாருங்கள்.